10/=

பக்கங்கள் 08

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி

Ethiroli

குரல் 01 அதிர்வு 315 புதன்கிழமை 04 ஏப்ரல் 2018 ethirolimedia@gmail.com 021 224 3

## விரைவில் ஐ. தே. க.வில் மறுசீரமைப்பு

கொழும்பு,ஏப்.04

பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பான விவாதம் இன்று முடிவடைந்த பின்னர் விரைவில் ஐக்கிய தேசிய கட்சியில் மறுசீரமைப்பு பணிகள் இடம்பெற உள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களுக்கு பிரதமர் அறிவித்துள்ளார்.

நேற்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே பிரதமர் 06▶

# தப்புமா தலை?



கொழும்பு, ஏப்ரல் 04

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை இன்று நாடாளுமன்றில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ள நிலையில், பிரதமர் இதில் வெற்றி பெறுவாரா என்ற பரபரப்பு கொழும்பு அரசியலில் ஏற்பட்டுள்ளது.

பொதுஜன முன்னணியால் 52 பேரின் கையொப்பத்துடன் பிரதமருக்கெதிரான நம்பிக்கையில்லா பிரேரணை நாடாளுமன்றில் 06▶

## பதவி விலக மாட்டேன்



கொழும்பு, ஏப். 04

பிரதமர் பதவியிலிருந்து விலகுமாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எழுத்துமூலம் முன்வைத்த கோரிக்கையை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நிராகரித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்றுமுன்தினம் கூடிய சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினர்களது கூட்டத்தின்போது தயாரிக்கப்பட்ட கடிதமொன்றை அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா, நேற்று செவ்வாய்க்கிழமை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளித்தார்.

அதில், பிரதமர் பதவியிலிருந்து விலகுமாறு கோரப்பட்டிருந்தது.

எனினும் அந்தக் கோரிக்கையை பிரதமர் அடியோடு நிராகரித்திருப்பதோடு தொடர்ந்தும் தாம் பிரதமர் 06▶

## கூட்டமைப்பின் முடிவு இன்று

கொழும்பு,ஏப்.04

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையில் என்ன முடிவெடுப்பது என்பதில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு இன்னும் முடிவெடுக்கவில்லை. கடுமையான வாதப் பிரதிவாதங்களுடன் கூட்டமைப்பின் கூட்டம் நடந்த நிலையில் இன்று காலை முடிவு அறிவிக்கப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று காலை தொடங்கிய கூட்டம் மதியம் நிறைவடைந்தபோது, எந்த முடிவும் எட்டப்படவில்லை. இந்த நிலையிலேயே கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், சுமந்திரன், மாவை சேனாதிராசா, செல்வம் அடைக்கலநாதன் 06▶

## நாடாளுமன்றை சூழ விசேட பாதுகாப்பு



கொழும்பு, ஏப். 04

நாடாளுமன்ற வளாகத்தை சூழ இன்று விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பான விவாதமும் வாக்கெடுப்பும் இன்று நாடாளுமன்றில் நடத்தப்பட உள்ளது. இந்த நிலையில், இன்று நாடாளுமன்றையும் அதனை அண்டிய பகுதிகளிலும் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் 06▶



## கோத்தா–மைத்திரி தரப்பு சீனாவில் இரகசிய பேச்சு?

கொழும்பு,ஏப். 04

சீனாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ச அங்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் முக்கிய ஆலோசகர்கள் சிலருடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளார் என செய்திகள் வெளியாகியுள்ளன.

ஜனாதிபதி சிறிசேனவிற்கு நெருக்கமான ஐவர் கொண்ட குழுவொன்றையும் 06▶

## கூட்டமைப்பின் ஆதரவைப் பெறாதீர்

### ஐ.தே.க.விற்கு ஜனாதிபதி எச்சரிக்கை



கொழும்பு,ஏப்.04

பிரதமருக்கு எதிராக கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லா பிரேரணையை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவுடன், தோற்கடிக்கும் முயற்சியில் இறங்கக் கூடாது என்று 'ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எச்சரிக்கை விடுத்துள்ளார்.

06▶

## பருத்தித்துறை பிரதேச சபையிலும் தொடரும் கூட்டு

TNA

யாழ்ப்பாணம், ஏப். 04

பருத்தித்துறை பிரதேச சபையிலும் ஈ.பி.டி.பி., ஐ.தே.க. மற்றும்சிறிலங்கா பொதுஜன முன்னணி ஆதரவு அளிக்க ஆட்சியை கைப்பற்றியது கூட்டமைப்பு.

நேற்று பிற்பகல் இடம்பெற்ற பருத்தித்துறை பிரதேச சபையின் 06▶

## கரவெட்டி பிரதேச சபையில் கடும் போட்டி

யாழ்ப்பாணம்,ஏப்.04

தமிழ் தேசிய கூட்டமைப்புக்கும் சிறிலங்கா சுதந்திர கட்சிக்குமிடையில் இடம்பெற்ற கடும் போட்டிக்கு மத்தியில் கரவெட்டி பிரதேச சபையினை ஒரு வாக்கு வித்தியாசத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பு கைப்பற்றியுள்ளது.

31 உறுப்பினர்களை கொண்ட கரவெட்டி பிரதேச சபையில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு 9 உறுப்பினர்களையும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி 06▶

## கூட்டமைப்புடன் கைகோர்த்தார் கருணா



மட்டக்களப்பு,ஏப்.04

போரதீவுப்பற்று பிரதேச சபையில் தமிழ் தேசிய கூட்டமைப்பு ஆட்சியமைக்க கருணா ஆதரவு வழங்கினார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் உள்ளூராட்சி மன்றங்களை 06▶

# “ரணிலில் மட்டும் பிழையல்ல மைத்திரி மீதே அதிக தவறு!”



**விஜயதாஸ ராஜபக்ஸ சிங்கள தொலைகாட்சி ஒன்றுக்கு வழங்கிய பேட்டி**

மொழிபெயர்ப்பு: எஸ்.சுரேஷ்

*கேள்வி: பிரதமருக்கு எதிரான நம்பிக்கை இல்லாப் பிரேரணை பற்றி உங்களின் நிலைப்பாடு என்ன?*

பதில்: முதலில் நம்பிக்கை இல்லாப் பிரேரணை என்றால் என்னவென்று சிறு விளக்கம் ஒன்றை வழங்க விரும்புகிறேன். நிறைவேற்று அதிகாரமுள்ளவர்களை பதவியில் இருந்து நீக்குவதற்கு இரண்டு முறைகள் உள்ளன. ஜனாதிபதி, பிரதம நீதியரசர்,மேல் நீதிமன்ற மற்றும் மேல்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோரை நீக்குவதற்கு குற்றவியல் பிரேரணை பயன்படுத்தப்படுகின்றது. பிரதமர் மற்றும் அமைச்சர்களை பதவி நீக்குவதற்கு நம்பிக்கை இல்லாப் பிரேரணை பயன்படுத்தப்படுகிறது.

இரண்டு முறைமைகளுக்கும் இடையில் வேறுபாடுகள் உள்ளன. பிரதமர் மீதோ அமைச்சர்கள் மீதோ தனக்கு நம்பிக்கை இல்லையென்றால் போதும். நம்பிக்கை இல்லாப் பிரேரணையைக் கொண்டு வர முடியும். ஆனால், குற்றவியல் பிரேரணை அப்படியல்ல. நம்பிக்கை இருந்தாலும் இல்லாவிட்டாலும் அந்தப் பிரேரணையைக் கொண்டு வர முடியாது. அவர் குற்றம் செய்திருக்க வேண்டும். அவர் குற்றவாளி என்று நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்க வேண்டும்.

பிரதமருக்கு எதிரான நம்பிக்கை இல்லாப் பிரேரணை தொடர்பில் நான் இன்னும் முடிவெடுக்கவில்லை. நாங்கள் மக்கள் பிரதிநிதியாக இருப்பதால் மக்கள் விரும்பும் தீர்மானத்தையே எடுக்க வேண்டும். ரணிலைப் பிரதமர் பதவியில் இருந்து நீக்கினால் எல்லாப் பிரச்சினைகளும் தீர்ந்துவிடுமா?

எங்களுக்குப் பிரச்சினையாக இருப்பது ரணிலா அல்லது அவரது கொள்கையா என்று நாம் பார்க்க வேண்டும். அவரை நீக்கி அந்த இடத்துக்கு கொண்டு வரப்படுபவர் பற்றி என்ன நம்பிக்கை இருக்கு? அதுபற்றி எமக்கு இன்னும் தெரியாது.

*கே: பிரதமருக்கு ஆதரவாக கையெழுத்திட்டவர்கள் வாக்கெடுப்பின்போது அவருக்கு எதிராக வாக்களிப்பார்களா?*

ா: அது தொடர்பில் என்னால் கருத்துக்கூற முடியாது.. ஆனால், அவ்வாறு செய்யும் உரிமை அவர்களுக்கு உண்டு. அந்தச் சந்தர்ப்பத்தில் அவர்கள் என்ன செய்வார்கள் என்று தெரியாது.

*கே: பிரதமர் மீது உங்களுக்கு நம்பிக்கை உண்டா?*

ப: சில விடயங்களில் நம்பிக்கை உண்டு.பல விடயங்களில் இல்லை. நம்பிக்கை இல்லாத விடயங்களே அதிகம் உள்ளன.

*கே: சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் பிரேரணையில் அடங்கியுள்ள 14 விடயங்கள் பிரதமர் மீதான நம்பிக்கை இன்மையை வெளிப்படுத்துவதற்குப் போதுமானதா?*

ப:இதனை வாசித்துப் பார்த்தேன். முதலாவது விடயம் மத்திய வங்கியை பிரதமர் அவரது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தமைக்கு எதிரானது. அரசியலமைப்பின்படி, அமைச்சர்களுக்கு எந்த நிறுவனத்தை வழங்குவது என்று தீர்மானம் எடுப்பவர் ஜனாதிபதியாவார். அப்படியென்றால் ஜனாதிபதிதான் மத்திய வங்கியை பிரதமருக்கு வழங்கியுள்ளார். சமர்ப்பிக்கப்பட்டுள்ள பிரேரணையின்படி ஜனாதிபதியே பிழை செய்துள்ளார்.

இரண்டாவது விடயம் அர்ஜுனன் மஹேந்திரனை மத்திய வங்கியின் ஆளுநராக நியமிப்பதற்கு பிரதமர் சிபாரிசு செய்தமை. சிபாரிசு மட்டுமே செய்துள்ளார். நியமித்தவர் ஜனாதிபதி தான். இதற்கான 25 வீத பொறுப்பு ரணிலுக்கும் 75 வீத பொறுப்பு ஜனாதிபதிக்கும் செல்கிறது.

14 விடயங்களுக்கு மேலதிகமாகவும் கொண்டு வந்திருக்க முடியும்.அப்படிக் கொண்டுவந்தால் இப்போதுள்ள அமைச்சர்களும் பாதிக்கப்படுவார்கள். ரணிலை மட்டும் சிக்கவைக்கும் விடயங்களை மாத்திரம் இதில் சேர்த்துவிட்டு ஏனைய அமைச்சர்கள் செய்த ஊழல்கள் தொடர்பான விடயங்களை தவிர்த்திருப்பது அமைச்சர்கள் சிலரது தேவைக்காகவா என்ற சந்தேகம் எழுவது நியாயமாகும்.

*கே: இந்தப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டிருப்பது முழு அரசுக்கு எதிராக என்றும் தேச விரோதிகளே இதை சமர்ப்பித்துள்ளனர் என்றும் அமைச்சர் அஜித் பெரேரா கூறியுள்ளார். அது சரியா?*

ப: பிரதமர் என்பவர் முழு அரசுக்கும் தலைவராக இருப்பதால் அவருக்கு எதிராக பிரேரணை கொண்டு வரப்படுவதை அரசுக்கு எதிராகக் கொண்டுவரப்படும் பிரேரணை என்று சொல்வதில் பிழை இல்லை. அரசில் உள்ள அமைச்சர்கள் நால்வர் பிரேரணையில் கையெழுத்திட்டுள்ளதால் அவர்கள் தேசத் துரோகிகள் என்று அரசு அறிவிக்க வேண்டும்.

*கே: ஐக்கிய தேசிய கட்சிக்குள் .பிளவு இல்லை என்று சொல்லப்படுகின்றபோதிலும், பிளவுகள் இருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றதே?*

ப: பிரிவு உண்டு என்பதே உண்மை.

*கே: ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர்கள் நான்காம் திகதி என்ன முடிவெடுப்பர்?*

ப: என்ன நடக்கும் என்று சொல்ல முடியாது. ஆனால், பிரேரணைக்கு ஆதரவாக ஐக்கிய தேசிய கட்சி எம்பிக்கள் பலர் வாக்களிப்பர் என்பது உண்மை.

*கே: பிரேரணையில் கையெழுத்திட்ட நான்கு அமைச்சர்களும் நீக்கப்பட வேண்டும் என்று ராஜித சேனாரத்னவும் லக்ஸ்மன் கிரியெல்லவும் கூறியுளார்கள். இது சாத்தியப்படுமா?*

ப: விரும்பியபோது அவர்களை நீக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு.

*கே: இவர்கள் கையெழுத்திட்டது ஜனாதிபதிக்குத் தெரியாமலா?*

ப: நூறு வீதம் இது ஜனாதிபதிக்கு அறிந்தே நடந்துள்ளது. ஜனாதிபதி அறியாமல் நடப்பதற்கு அறவே வாய்ப்பில்லை.

*கே: உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சிக்கு ஏற்பட்ட தோல்வி அல்லவா இந்த நிலைமைக்கு காரணம்?*

ப: இப்படியொரு நிலைமை ஏற்படும் என்று ஒன்றரை வருடங்களுக்கு முன்பே நான் அறிந்தேன். அது தொடர்பில் பிரதமருடன் பேச்சு நடத்தினேன். இந்தத் தேர்தல் முடிவுகள் நாடாளுமன்றத் தேர்தலில் கிடைத்தால் ஐக்கிய தேசிய கட்சிக்கு 68 ஆசனங்கள் கிடைக்கும். சுதந்திரக் கட்சிக்கு 27 கிடைக்கும். மஹிந்த அணிக்கு 95 கிடைக்கும். அந்த அடிப்படையில் மைத்திரியும் மஹிந்தவும் இணைந்தால் 120 க்கும் மேல் கிடைக்கும்.

இந்தத் தோல்விக்கு பல காரணங்கள் உண்டு. ஆட்சி மாற்றம் தோன்றியதில் இருந்து விவசாயிகளுக்குப் பிரச்சினை இருந்து வருகிறது. அவர்களின் ஒரு பிரச்சினையும் தீர்க்கப்படவில்லை. மறுபுறம், இந்த நாட்டை நாம் காட்டிக் கொடுத்தோம் என்று பிரசாரம் செய்யப்பட்டது.

எமது படையினரை போர்க்குற்ற நீதிமன்றத்துக்கு அனுப்பும் ஜெனீவா பிரேரணைக்கு இலங்கை அரசு இணை அனுசரணை வழங்கியமை பிழையாகும். ஜனாதிபதிகூட இதை அறிந்திருக்கவில்லை. படையினர் இந்த அரசுமீது வைத்திருந்த நம்பிக்கையை இழந்தனர்.

காணாமல்போனோர் போவதைத் தடுக்கும் அலுவலகம் கொண்டுவரப்பட்டபோது அது கடந்த காலத்தில் இடம்பெற்றவற்றுக்குப் பொருந்தாது என்று அரசு கூறியது. ஆனால், அந்தச் சட்டத்தின் 10ஆவது சரத்து கூறுகிறது கடந்த காலத்தில் காணாமல் போனமைக்கு காரணம் என்று சாட்சியத்துடன் நிரூபித்தால் தண்டிக்கப்படுவர் என்று.

20 அல்லது 25 வருடங்களுக்கு முன் இறந்த புலி உறுப்பினர் ஒருவரைக் கடத்திச் சென்றவர் இவர்தான் என்று படைச் சிப்பாய் ஒருவரைக் காட்டி யாரவது ஒருவர் சாட்சியம் சொன்னால் அந்தச் சிப்பாய் கைது செய்யப்படுவார். இது பாரதூரமான ஒன்று. இது தொடர்பில் நான் பேசியதால்தான் என்னை வெளியில் போட்டனர்.

*கே: திருடர்களைப் பாதுகாக்கிறீர்கள் என்று உங்கள் மீது அன்று சுமத்தப்பட்ட குற்றச்சட்டு தொடர்பில்?*

ப: திருடர்களைப் பிடிக்கும் அதிகாரம் உலகில் எந்த நாட்டில் நீதி அமைச்சருக்கு வழங்கப்பட்டிருக்கு? அது பொலிஸாரின் வேலை. பொலிஸுக்குப் பொறுப்பாக இருந்தவர் சாகல ரத்னாயக்க. அதுபோக திருடர்களை பிடிப்பதற்காக பிரதமர் தலைமையில் குழுவொன்றும் உள்ளது .

நீதி அமைச்சர் ஒருவருக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரத்தின் அடிப்படையில் என்னால் என்னவெல்லாம் செய்ய முடியுமோ அதையெல்லாம் செய்தேன். வழக்குகளைத் துரிதப்படுத்தினேன்.

(03ஆம் பக்கம் பார்க்க)

எதிரொலி
Ethiroli
புதன். 04 ஏப்ரல் 2018 ethirolimedia@gmail.com

## யாருக்கு வெற்றி?

நாடகம் ஒன்று அதன் உச்சக் காட்சியை எட்டியிருக்கிறது. இன்று இலங்கையர் அனைவரின் கவனமும் நாடாளுமன்றத்தில் என்ன நடக்கப்போகின்றது என்பதை அறிவதிலேயே குறியாக இருக்கும். முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு 'சஸ்பென்ஸ்' கொண்டதாக இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை அமைந்துவிட்டது. எந்த அணி நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்ததோ, அந்த அணியின் தலைவரான மஹிந்த ராஜபக்ச பெரும்பாலும் இன்றைய வாக்கெடுப்பில் கலந்து கொள்ளமாட்டரென்றே கூறப்படுகின்றது. அத்துடன் அந்த அணியைச் சேர்ந்த இன்னும் சிலர் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமல் நழுவுவதற்கான காரியங்களிலும் இறங்கியுள்ளனர்.

நல்லாட்சி அரசின் பிரதான பங்காளிக் கட்சிகளிலொன்றான சுதந்திரக் கட்சியும் இன்னும் உறுதியான முடிவை எடுக்கவில்லை. காரணம், அந்தக் கட்சிக்குள்ளேயே குறித்த பிரேரணைக்கு ஆதரவாகவும், எதிராகவும் இரு தரப்புகள் உள்ளன. அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தலைமையிலான தரப்பு, இந்தப் பிரேரணையை வெல்லவைத்து சுதந்திரக் கட்சி தனித்து ஆட்சியமைக்க வேண்டுமென நினைக்கிறது. இதன் போது பிரதமர் பதவி வழங்கப்படும் என்ற நப்பாசையில், எப்படியாவ்து பிரேரணையை வெல்லச் செய்ய வேண்டும் அல்லது அதற்கு முதல் ரணில் விக்கிரமசிங்க தானாகவே பதவியை உதறிவிட்டுப் போகவேண்டும் என்பதற்காக, தன்னுடையை 'பிரியத்துக்குரிய தூக்கத்தையும்' மறந்து நிமால் ஓடியாடித் திரிகின்றார். சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் துமிந்த திஸநாயக்க தரப்பிலான குழுவினரோ பிரேரணையைத் தோற்கடிப்பதில் ஆர்வம் காட்டுகின்றனர். சிலவேளைகளில் பிரேரணை வென்று, ரணில் பதவி விலகினால் அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மஹிந்த மீண்டும் ஆட்சிக் கட்டிலில் அமரக் கூடும் என்பதால், அத்தகைய நிலையைத் தடுப்பதற்காகவே துமிந்த குழுவினர் பிரேரணைக்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்துள்ளனர்.

இதைவிட முஸ்லிம் கட்சிகளும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் கடைசிவரை தங்கள் நிலைப்பாடு என்ன என்பதைச் சொல்லாமல் பொத்திப் பொத்தி மறைத்து வைத்திருக்கின்றன. இப்படி பெரும்பான்மையான கட்சிகள் தங்களுடைய நிலைப்பாடு என்ன என்பதைச் சொல்லாமல் இருப்பதற்கு முக்கிய காரணம், ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் வெல்லுமா, தோற்குமா என்று தெரியாத திரிசங்கு நிலைதான்.

இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் மிக்க ஜனாதிபதி கூட, தன்னுடைய நிலைப்பாட்டை வெளிப்படையாகச் சொல்ல மறுக்கிறார். அவருக்கு வேறு வகையிலான அழுத்தம். அமெரிக்கா, இந்தியா ஆகிய இரு தரப்புகளும் ரணில் இந்தப் பிரேரணையில் காப்பாற்றப்படவேண்டும் என மைத்திரிக்கு நெருக்குவாரம் கொடுத்து வருகின்றன. ஆனால், அவருடைய சகாக்களின் அறிவுரை வேறுவிதமாக இருக்கிறது. ரணிலைக் கவிழ்த்து சுதந்திரக் கட்சியின் கையில் அதிகாரத்தை எடுக்காவிட்டால், அடுத்த தேர்தலில் கட்சி இன்னும் பலமாக அடிவாங்கும். எனவே கட்சியைக் காப்பாற்ற ரணிலைப் பலி கொடுத்தேயாக வேண்டும் என்பதே மைத்திரியின் சொந்த நிலைப்பாடு. எனினும் மைத்திரியை இந்தக் கதிரையில் உட்கார வைக்கத் திட்டமிட்ட சக்திகள், ரணிலைக் கைவிடத் தயாராகவில்லை. இவையெல்லாம் சேர்ந்தே இந்தப் பிரேரணைக்கு என்ன நடக்கும் என்ற எதிர்பார்ப்பைத் தூண்டிவிட்டன. இதோ, இத்தனை நாளும் மறைக்கப்பட்டிருந்த சஸ்பென்ஸ் உடைய இன்றைக்கு திரை விலகப் போகிறது. ஆனால் வெல்லப்போவது யார் என்பது கடைசி நேரம் வரை தெரியாததாக இருப்பினும், தோற்கப் போவது யார் என்பது மட்டும் தெளிவாகத் தெரிகின்றது. தோற்கப் போகும் அந்தத் தரப்பு எது? வேறு யார், இந்தக் கோமாளிகளுக்காக வாக்களித்து விட்டு , தங்கள் வாழ்வு வளம் பெறும் என இன்னமும் நம்பிக் கொண்டிருக்கும் மக்களே தோற்கப் போகும் தரப்பு.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

# உள்ளூராட்சித் தேர்தல் பிரசாரத்தில் பேசிய முன்னாள் போராளியிடம் விசாரணை!

கொழும்பு, ஏப். 04

கடந்த உள்ளூராட்சித் தேர்தல் பிரசாரத்தின் போது வெளியிட்ட கருத்துத் தொடர்பில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் போராளி ஒருவர் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் கந்தசாமி இன்பராஜா (வயது- 43) என்பவரே விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

தேர்தல் பிரசாரத்தின் போது தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர்கள், இராணுவப் புலனாய்வாளர்களுக்கு அச்சமின்றி தகவல்களை வழங்குவதை நிறுத்த வேண்டும் என வலியுறுத்தியிருந்ததாகக் கூறப்படுவது தொடர்பிலேயே இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன. குறித்த பிரசாரம் தொடர்பில் கட்சியின் செயலாளரான ஐயம்பிள்ளை இராஜசேகரன் கடந்தமார்ச் 30 ஆம் திகதி அதிகாரிகளால் ஏற்கனவே விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

## "ரணிலில் மட்டும் பிழையல்ல...

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

முப்பது நீதிபதிகளை சேர்ப்பதற்காக விண்ணப்பம் கோரப்பட்டபோது 11 பேரிடம் இருந்தே விண்ணப்பங்கள் வந்தன. இங்குள்ள சம்பளப் போதாமை காரணமாக யாரும் இதற்கு வருவதற்கு விரும்புவதில்லை.

பிறகு நான் சண்டை பிடித்து அமைச்சரவையின் அனுமதியுடன் சம்பளத்தை அதிகரித்துக்கொண்டேன். இதன் மூலம் 47 பேரை இணைக்க முடிந்தது. இந்த விவகாரத்தில் ஜனாதிபதியின் உதவி எனக்கு கிடைத்தது. ஆனால், என்னை நீக்கியதன் பின் எந்த மாற்றமும் இடம்பெறவில்லை.

*கே: அப்படியென்றால் உங்கள்மீது குற்றம் சுமத்தப்பட்டு நீங்கள் நீக்கப்பட்டது ஏன் ?*

ப: அதற்குப் பல காரணங்கள் உண்டு. அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு கொடுத்தத்தை நான் எதிர்த்தேன். வழக்கு ஒன்றும் தாக்கல் செய்தேன். கடந்த காலங்களில் இலங்கை போக்குவரத்து சபை, சிறிலங்கா காப்புறுதி நிறுவனம் உள்ளிட்ட பல நிறுவனங்களை தனியார்மயப் படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டபோது நீதிமன்றம் சென்று அவற்றைத் தடுத்தேன். சர்வதேச வலைக்குள் சிக்கியுள்ள பலர் ஆட்சியில் இருக்கின்றனர்.

இந்த தனியார்மயப்படுத்தல் காரணமாகத்தான் அன்று ஆட்சி செய்த ஐக்கிய தேசிய இரண்டு வருடங்களில் எதிர்க்கட்சிக்குச் சென்றது. அந்த நிலை இனியும் ஏற்படாமல் இருப்பதற்காகவே நான் போராடினேன். அதைப் பிடிக்காமல் சர்வதேச வலைக்குள் சிக்கி இருப்பவர்கள் தான் என்னை விரட்டினர்.

மிகவும் சிரமப்பட்டே ஐக்கிய தேசியக் கட்சியை ஆட்சிக்கு கொண்டு வந்தோம். அப்படிப்பட்ட ஆட்சியைத் தக்க வைப்பதற்கும் கட்சியை பலப்படுத்துவதற்கும் நான் நடவடிக்கை எடுத்தது தப்பா? நான் இந்த நடவடிக்கை எடுத்துக்கொண்டு சென்றபோதுதான் தலைவர் சிலரைத் தூண்டி எனக்கு எதிராக நம்பிக்கை இல்லாப் பிரேரணையைக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்தார். இருந்தும், எனது நிலைப்பாட்டில் எதுவித மாற்றமும் ஏற்படாது.

இப்போது நிலைமை மோசமாகிவிட்டது. உள்ளூராட்சி சபைத் தேர்தலில் படுதோல்வி அடைந்தோம். அடுத்த மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கு வேட்பாளர்களை பிடிப்பதுகூட கஷ்டமாக இருக்கும். ஒருவரும் வரமாட்டார்கள்.

*கே: பொது வேட்பாளராக மைத்திரியை நிறுத்திய நாள் முதல் நீங்கள் அவருடன் நெருக்கமாக இருந்து வருகிறீர்கள். உங்களுக்கு எதிராகப் பிரச்சினை வந்தபோது நீங்கள் அவருடன் பேசவில்லையா?*

ப: பேசினேன்.

*கே: உங்களை அமைச்சுப் பதவியில் இருந்து நீக்கியது ரணிலா, மைத்திரியா?*

ப: இருவரும். என்னை நீக்கும் அதிகாரம் பிரதமரிடம் இல்லை. ஜனாதிபதியிடமே உண்டு. நான் மைத்திரியுடன் இன்றும் நெருக்கமாகத்தான் இருக்கின்றேன். எனக்கு தனிப்பட்ட கோபம்–பிரச்சினை எதுவும் அவருடன் கிடையாது. அதற்காக எனது பதவியைக் காப்பாற்றுமாறு நான் அவரிடம் கேட்கவில்லை.

*கே: 2020 ஜனாதிபதித் தேர்தலின்போதும் நீங்கள் பொது வேட்பாளருக்கே ஆதரவு வழங்குவீர்களா?*

ப: அப்போதைய அரசியல் சூழ்நிலைக்கு ஏற்பதான் அது தொடர்பில் முடிவெடுக்க முடியும். நான் இதுவரை நான்கு ஜனாதிபதித் தேர்தலில் வேலை செய்திருக்கின்றேன். எதிர்காலத்தில் எவ்வாறு அமையும் என்று பார்ப்போம்.

*கே: ரணில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக இருப்பதற்குப் பொருத்தமில்லை என்று நீங்கள் கருதினால் அடுத்த தலைவர் யார்?*

ப: இதைக் கட்சிதான் தீர்மானிக்க வேண்டும். என்னால் சொல்ல முடியாது. இராணுவத்தின் குடும்பம், விவசாயிகள், பல்கலைக்கழக மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் வைத்தியர்கள் என எல்லோரும் எம்மைவிட்டுப் போய்விட்டனர். அப்படியென்றால் ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஒருவரும் இல்லை.

இவர்களை மீண்டும் எம்முடன் இணைத்துக்கொள்வதாக இருந்தால் சிறந்த தலைமைத்துவதுடன் வேகமாக பயணிக்க வேண்டும்.

*கே: கண்டி கலவரத்தை அடிப்படையாகக் கொண்டு முஸ்லிம் வாக்குகள் உங்களை விட்டுச் சென்றுள்ளதா?*

ப: ஆம். அவர்கள் விலகிவிட்டார்கள். ரவூப் ஹக்கீமின் கூற்றின்படி அது தெரிகிறது. இது முதலாவது சம்பவம் அல்ல. அளுத்கம உள்ளிட்ட பல சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

நான் நீதி அமைச்சராக இருந்தபோது ஜீலானி பக்கம் பிரச்சினை ஒன்று ஏற்பட இருப்பதாக தகவல் கிடைத்தது. உடனே தலையிட்டு அதைத் தடுத்துவிட்டேன். அதேபோல் குளியாபிட்டிய பகுதியிலும் பிரச்சினை ஏற்படவிருந்தது. அதையும் தடுத்துவிட்டேன்.

இதேபோல் கண்டி கலவரமும் ஏற்படாமல் தடுத்து இருக்கலாம். ஆனால், செய்யவில்லை. இதனால் முஸ்லிம்கள் ஐக்கிய தேசியக் கட்சியுடன் கோபத்தில் இருக்கின்றனர்.

*கே: உங்களின் அரசியல் எதிர்காலம் தங்கி இருப்பது ஐக்கிய தேசிய கட்சியிலா?*

ப: ஆம். கட்சியின் பிழைகளைத் திருத்திக்கொண்டு எதிர்காலத்தில் சரியான தலைமைத்துவம் ஒன்றின்கீழ் பலமான அரசியல் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு எதிர்பார்க்கின்றேன். இது எவ்வளவு தூரம் வெற்றியளிக்கும் என்று எனக்குத் தெரியாது.

அரசியலில் இலாபம் அடைய வேண்டும் என்பதற்காக ஏதாவது ஒரு கட்சியில் இணையும். யாருடைய காலையாவது பிடிக்கும் ஆள் நானில்லை

*கே: உங்களுக்கு கோத்தபாய ராஜபக்சமீது அதிக விருப்பம் அல்லவா?*

ப: எனக்கு யாருடனும் பிரச்சினை இல்லை. மஹிந்தவுடன் எதிர்க்கட்சியில் அமர்ந்தேன். மறுநாள் என்னை அலரிமாளிகைக்கு வருமாறு கூறினார். போய்ச் சந்தித்துப் பேசி கோப்பி குடித்துவிட்டே வந்தேன். தனிப்பட்ட கோபம் எவருடனும் இல்லை.

## இன்று நாளும் கோளும்

04.04.2018 புதன்கிழமை ஏவிளம்பி வருடம் பங்குனி மாதம் 21 ஆம் நாள்

சதுர்த்தி பி.ப. 07.17 வரை
விசாகம் மு.ப. 09.01 வரை
குளிகை 10 .30 - 12.00 வரை
இராகுகாலம் 12.00 - 01.30
சுபநேரம் காலை 09.30 - 10.30
எமகண்டம் பி.ப. 07.30 - 09.00

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சிரமம் | சிந்தனை | குழப்பம் | நம்பிக்கை | உதவி | சுகம் | சாதனை | சோர்வு | அனுகூலம் | ஆர்வம் | அலைச்சல் | விவேகம் |

# புத்தளம் வீதியில் விபத்து: 37 பெண்கள் காயம்




புத்தளம், ஏப். 04

புத்தளம் - சிலாபம் பிரதான வீதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் 35 பெண்கள் காயமடைந்துள்ளனர்.

ஆடைத் தொழிற்சாலை ஒன்றுக்குப் பணியாளர்களை ஏற்றிச் சென்ற பஸ், நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறியில் மோதியதாலேயே இந்த விபத்து சம்பவித்துள்ளது.

குறித்த பஸ்ஸில் சுமார் 40 பெண் பணியாளர்கள் பயணம் செய்தனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காயமடைந்த பெண்கள் சிலாபம் பொது மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர். விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ஆ)

# எலும்புக் கூடுகளுக்கும் இராணுவத்துக்கும் தொடர்பு



மன்னார், ஏப். 04

மன்னார் மற்றும் மாந்தை பகுதிகளில் இருந்து மீட்கப்பட்ட எலும்பு கூடுகளுக்கும் இராணுவத்துக்கும் இடையில் தொடர்பு உள்ளது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மன்னார் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.

மன்னார் - லங்கா சதொச விற்பனை நிலைய வளாகத்தில் இருந்து அகழ்ந்தெடுக்கப்பட்ட மண், மன்னாரில் உள்ள பலருக்கும் விற்பனை செய்யப்பட்டுள்ளது. இதன்போது மன்னார் எமில் நகர் கிராமத்தைச் சேர்ந்த வீடொன்றுக்கு விற்கப்பட்ட மண்ணில் சந்தேகிக்கப்படும் வகையில் மனித எலும்புத் துண்டுகள் பல மீட்கப்பட்டுள்ளன. இதனை அடுத்து அந்த வீட்டின் உரிமையாளர் கடந்த 25 ஆம் திகதி மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார். இந்த விடயம் தொடர்பில் நீதியான விசாரணை இடம்பெற வேண்டும்." எனவும் அவர் தெரிவித்தார். (ஆ)

# அமல் கருணாசேகரவின் இந்தியப் பயணத்துக்குத் தடை



கொழும்பு, ஏப்.04

இராணுவத்தின் முன்னாள் தலைமை அதிகாரியும், பாதுகாப்புச் சேவைகள் கட்டளை அதிகாரிகள் கல்லூரியின் தற்போதைய தளபதியுமான மேஜர் ஜெனரல் அமல் கருணாசேகர, இந்தியாவுக்குப் பயணம் மேற்கொள்ள வழங்கிய அனுமதியை ரத்துச் செய்தும், அவர் வெளிநாடு செல்வதற்குத் தடை விதித்தும் கல்கிசை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஊடகவியலாளர் கெய்த் நொயார் கடத்தப்பட்டு தாக்கப்பட்ட வழக்கில் மேஜர் ஜெனரல் அமல் கருணாசேகரவை சந்தேக நபராக உள்ளடக்க முடியும் என்று கல்கிசை நீதிமன்றத்தில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் சமர்ப்பித்த அறிக்கையை அடுத்தே, அவரது வெளிநாட்டுப் பயணத்துக்கு நீதிவான் தடை விதித்துள்ளார்.

முன்னதாக, மேஜர் ஜெனரல் அமல் கருணாசேகர வெளிநாடு செல்வதற்கு நீதிமன்றம் தடைவிதித்திருந்தது.

எனினும், பாதுகாப்புச் சேவைகள் கட்டளை அதிகாரிகள் கல்லூரியின் தளபதியாக நியமிக்கப்பட்ட பின்னர், அவர் கடந்த முதலாம் திகதி முதல் 7ஆம் திகதி வரை இந்தியா பயணம் மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்தார். இதற்காக அவர் நீதிமன்றத்தை அணுகி, வெளிநாட்டுப் பயணத் தடையை நீக்குமாறு கோரியிருந்தார். அதற்கு நீதிமன்றம் அனுமதி அளித்தது.

இந்த நிலையில், மேஜர் ஜெனரல் அமல் கருணாசேகரவின் பயணத்துக்குத் தடை விதிக்குமாறு கடந்த திங்கட்கிழமை, குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கல்கிசை நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்தனர்.

இதுதொடர்பாகத் தாம் பாதுகாப்புச் செயலருடன் கலந்துரையாடியதாகவும், மேஜர் ஜெனரல் அமல் கருணாசேகரவின் பயணத்துக்கு நீதிமன்றம் தடைவிதித்திருக்கும் விடயத்தை தாம் அறியவில்லை என்று அவர் கூறினார் என்று குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றத்தில் தெரிவித்தனர். அத்துடன் தாம் அவரை இந்தப் பயணத்துக்காக முன்மொழியவில்லை என்றும், அதனை இராணுவமே பரிந்துரைத்தது என்றும் பாதுகாப்புச் செயலர் தம்மிடம் கூறிய தாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

இந்த நிலையில், நேற்றுமுன் தினம் இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது, மேஜர் ஜெனரல் அமல் கருணாசேகரவின் இந்தியப் பயணம் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக இராணுவத்தின் தரப்பில் நீதிமன்றத்துக்கு தெரியப்படுத்தப்பட்டது.

இதையடுத்து, மேஜர் ஜெனரல் அமல் கருணாசேகர வெளிநாடு செல்வதற்கு வழங்கப்பட்ட அனுமதியை ரத்துச் செய்த நீதிமன்றம், மீண்டும் அவருக்கான தடை உத்தரவைப் பிறப்பித்தது.

இதேவேளை, மேஜர் ஜெனரல் அமல் கருணாசேகர, வாக்குமூலம் அளிப்பதற்காக நாளை குற்றப் புலனாய்வுப் பிரிவிடம் முன்னிலையாக வேண்டும் என்றும் கல்கிசை மேலதிக நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (ஆ)

## ஐ.நா.சிறுவர் உரிமை நிகழ்ச்சித் திட்டம்

கொழும்பு, ஏப். 04

ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் உரிமைகள் சாசனம் தொடர்பாக அறிவுறுத்தும் நிகழ்ச்சித் திட்டம் ஒன்றை தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை ஆரம்பித்துள்ளது.

பாடசாலை மாணவர்கள் இதனைப் புரிந்துகொள்ளும் வகையில் மாணவர்கள் மத்தியில் தெளிவுபடுத்தும் நோக்கில் சிறுவர் உரிமைகள் தொடர்பான சாசனம் இலகு முறையில் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இதற்கான நிகழ்ச்சித் திட்டத்தை மாவட்ட மட்டத்தில் நடைமுறைப்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கல்வியமைச்சின் ஒத்துழைப்புடன் அதன் முதலாவது நிகழ்ச்சித் திட்டம் மேல் மாகாண பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. நாட்டில் சிறுவர்களின் உரிமைகள் மீறப்படும் சந்தர்ப்பங்களில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை அது குறித்து துரிதமாக நடவடிக்கை எடுக்கும். அவ்வாறான சம்பவங்கள் பற்றி அருகிலுள்ள பொலிஸ் நிலையங்களுக்கோ அல்லது 1929 என்ற அவசர தொலைபேசி இலக்கத்துக்கோ அறிவிக்குமாறு அதிகார சபை பொது மக்களைக் கேட்டுள்ளது. (ஆ)

# மல்யுத்தப் போட்டியில் மட்டு. மாணவன் முதலிடம்



மட்டக்களப்பு, ஏப்.04

அகில இலங்கை ரீதியில் இடம்பெற்ற மல்யுத்தப் போட்டியில் மட்டக்களப்பு இந்துக் கல்லூரி மாணவன் கிருஸ்ணகுமார் மிதுலாசன் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

இலங்கை மல்யுத்த சபையால் கனிஷ்ர பிரிவு வீரர்களுக்காக நடத்தப்பட்ட மல்யுத்தப்போட்டி கொழும்பு விளையாட்டமைச்சின் உள்ளக விளையாட்டரங்கில் கடந்த 24 மற்றும் 25ஆம் திகதிகளில் நடைபெற்றது.

79 கிலோகிராமுக்கு உட்பட்ட திறந்த போட்டியாக இப்போட்டி நடைபெற்றது.

இந்தப் போட்டியில் அகில இலங்கை ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்ற கிருஸ்ணகுமார் மிதுலாசனை மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் மா.உதயகுமார் கௌரவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

# மக்களுக்கு அவசர எச்சரிக்கை!

## விடுத்தது வளிமண்டலவியல் திணைக்களம்

கொழும்பு, ஏப். 04

நாட்டில் வழமைக்கு மாறாக அதிக வெப்பமான காலநிலை உருவாகியுள்ளமையால் வளிமண்டலவியல் திணைக்களம் மக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இலங்கை வான்பரப்பில் காற்றின் வேகம் குறைவடைந்தமை உட்பட கால நிலை மாற்றங்கள் காரணமாக வெப்ப நிலை அதிகரித்துள்ளது. இந்த வெப்பமான காலநிலை இந்த மாத இறுதி வரை தொடரும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

"குறித்த வெப்பமான காலநிலையால் உடலுக்கு தீங்கு விளைவிக்க கூடும் என சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது. அதிக வெப்பம் காரணமாக இலகுவாக சருமம் வறட்சி அடையக் கூடும். இவ்வாறான காலநிலையில் ஏற்படும் பாதிப்புகளில் இருந்து தப்பிக் கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். உடலைப் பாதுகாத்து கொள்ள நாள் ஒன்றுக்கு கிட்டத்தட்ட 3 லீற்றர் நீர் அருந்த வேண்டும்." என கொழும்பு தெற்கு வைத்தியசாலையின் விசேட வைத்தியர் தில்ஹார் சமரவீர தெரிவித்துள்ளார்.

கொழும்பு உட்பட பல பகுதியில் வழமையை விடவும் 4 செல்சியஸ் பாகை வெப்ப நிலை அதிகரித்துக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

# கிளிநொச்சியில் பிறப்பு வீதம் குறைவு

கிளிநொச்சி, ஏப். 04

கிளிநொச்சி மாவட்டத்தில் தரம் ஒன்றில் மாணவர்கள் இணைவதில் காணப்படுகின்ற வீழ்ச்சி நிலை, கிளிநொச்சி மாவட்டத்தின் பிறப்பு வீதத்தின் வீழ்ச்சியைக்காட்டுகிறது என கிளிநொச்சி வலயக் கல்விப்பணிப்பாளர் ஜோன்குயின்ரஸ் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் இணைத் தலைவர்கள் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

"கடந்த சில ஆண்டுகளாக தரம் ஒன்றில் மாணவர்கள் இணைவது மிகக் குறைவாகக் காணப்படுகின்றது. கடந்த 2016 ஆம் ஆண்டில் 2 ஆயிரத்து 565 மாணவர்கள் தரம் ஒன்றில் இணைந்து கொண்டனர். இதே போன்று 2017ஆம் ஆண்டில் 2 ஆயிரத்து 319 மாணவர்கள் தரம் இணைந்து கொண்டனர். 2018 ஆம் ஆண்டில் 2ஆயிரத்து 180 மாணவர்கள் இணைந்து கொண்டுள்ளனர். இவ்வாறு மாணவர்களின் இணைவு வீதம் மிகக்குறைவடைந்து செல்கின்றது. பிறப்பு வீதத்தை அதிகரிப்பதுக்கான பல்வேறு நலத்திட்டங்களை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும்." எனவும் அவர் தெரிவித்தார்.(ஆ)



# அங்கொட லொக்காவின் சகா சிட்டி சிக்கினார்!

கொழும்பு, ஏப். 04

பிரபல பாதாள உலகத் குழுத்தலைவரான அங்கொட லொக்காவுக்கு மிகவும் நெருக்கமான சந்தேக நபரான எலவலகே சரத்குமார எனப்படும் சிட்டி என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

புல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய இவர் பொலிஸ் விஷேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர கூறினார்.

கொட்டிகாவத்தை பிரதேசத்தில் உள்ள அவரின் வீட்டில் வைத்தே நேற்றுக் காலை அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்படும் போது அவரிடம் இருந்த கைக்குண்டு ஒன்றும் பொலிஸ் விஷேட அதிரடிப் படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

குறித்த சந்தேகநபர் இதற்கு முனனரும் பல தடவைகள் துப்பாக்கி வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவர் என்று தெரிய வந்துள்ளது.

சந்தேகநபர் தற்போது பொலிஸ் விஷேட அதிரடிப் படையினரால் தடுத்து வைத்து விசாரிக்கப்பட்டு வருவதுடன், அதன் பின்னர் அவர் திட்டமிட்ட குற்றச் செயல் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட உள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்துள்ளார். (ஆ)

# தென் எருவில் பிரதேச சபையை த.தே.கூட்டமைப்பு கைப்பற்றியது!



மண்முனை, ஏப்.04

மட்டக்களப்பு மண்முனைத் தென் எருவில் பற்றுப் பிரதேச சபை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வசமாகியுள்ளது. தென் எருவில் பற்று உள்ளூராட்சி மன்றத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்றுச் செவ்வாய்க்கிழமை பிரதேச சபையின் கேட்போர் கூட்டத்தில் நடைபெற்றது.

கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் எம்.வை.எம்.சலீம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது சபைக்கான தவிசாளர் தெரிவு இடம்பெற்றது. இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் ஞா.யோகநாதனும், ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் த.தவராணியும் போட்டியிட்டனர்.

இதில் ஞா.யோகநாதனுக்கு ஆதரவாக 11 வாக்குகளும், த.தவறாணிக்கு ஆதரவாக 6 வாக்குகளும் கிடைத்தன. இதில் 4 பேர் வாக்களிப்பில் கலந்து கொள்ளாமல் நடுநிலைமை வகித்தனர்.

இதனை அடுத்து, மண்முனை தென் எருவில் பற்றுப் பிரதேச சபையின் தவிசாளராக ஞா.யோகநாதன் தெரிவு செய்யப்பட்டார். (ஆ)

# நிலக்கண்ணி வெடியற்ற நாடாக இலங்கையை மாற்ற நடவடிக்கை

கொழும்பு, ஏப்.04

2020 ஆம் ஆண்டு இலங்கையை நிலக்கண்ணி வெடிகள் இல்லாத நாடாக மாற்றுவதற்கான சகல ஒத்துழைப்புகளும் வழங்கப்படும் என்று இலங்கைக்கான பிரிட்டன் பிரதி உயர் ஸ்தானிகர் தொம் பேர்ன் தெரிவித்துள்ளார்.

"2010,ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குள் இலங்கையில் நிலக்கண்ணி வெடிகளை அகற்றுவதற்காகப் பிரிட்டன் அரசாங்கம் 1.2 பில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது. அத்துடன்கடந்த ஆண்டு இலங்கை, ஒட்டாவா சாசனத்தை ஏற்றுக் கொண்டுள்ளது. இதன் அடிப்படையில் 2020 ஆம் ஆண்டுக்குள் நிலக்கண்ணி வெடிகள் இல்லாத நாடாக இலங்கை மாற்றப்படும்." என்று அவர் தெரிவித்துள்ளார். (ஆ)

# குளித்த பெண்ணை படம் எடுத்தவர் மாட்டினார்!

முந்தல், ஏப். 04

முந்தல் பத்துளு ஓயா பிரதேசத்தில் பெண் ஒருவர் குளிக்கும் காட்சியைத் தனது கைப் பேசியில் படம் எடுத்து கொண்டிருந்ததாகக் கூறப்படும் ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

முந்தல் பத்துளு ஓயா பிரதேசத்தைச் சேர்ந்த 34 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தையே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.


இந்தச் சம்பவம் தொடர்பில் குறித்த பெண் ஆரச்சிக்கட்டுப் பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டை அடுத்தே சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தனது வீட்டுக்கு அருகாமையில் குளித்துக் கொண்டிருந்த போது தான் குளிக்கும் காட்சியை ஏணி ஒன்றில் ஏறி நின்று கொண்டு சந்தேக நபர் தனது கைப்பேசியில் படம் எடுத்து கொண்டிருந்ததாக அப்பெண் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

எனினும் கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து குறித்த கைப்பேசி மீட்கப்படவில்லை எனப்

# தேயிலை மலையில் சிறுத்தைக் குட்டி மீட்பு





மஸ்கெலியா, ஏப். 04

மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மஸ்கெலியா கவரவில பெரிய சோலங்கந்த தேயிலை மலையில் இருந்து நேற்றுச் சிறுத்தைக் குட்டி ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

பிறந்து நான்கு நாட்களே நிரம்பிய கண்கள் கூட திறக்கப்படாத நிலையிலேயே குறித்த சிறுத்தை குட்டி மீட்கப்பட்டுள்ளது.

தொழிலாளர்களைக் கண்டவுடன் தாய் சிறுத்தை குட்டியை விட்டுச் சென்றுள்ளது. இதனையடுத்து தொழிலாளர்கள் அநாதரவாக நின்ற சிறுத்தைக் குட்டியை மீட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட சிறுத்தைக் குட்டி நல்ல தண்ணி வனஜீவராசிகள் திணைக்களத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேற்படி சிறுத்தைக் குட்டியை தாய் சிறுத்தை தேடிவரக்கூடும் என்பதால் அவதானமாக இருக்குமாறு பொது மக்களுக்குப் பொலிஸார் அறிவித்தல் விடுத்துள்ளனர்.

கடந்த சில வார காலமாக இந்தத் தோட்டத்தில் சிறுத்தையின் நடமாட்டம் அதிகரித்துள்ளமையால் தாம் அச்சத்துடன் வாழ்ந்து வருவதாகப் பொது மக்கள் தெரிவித்துள்ளனர். (ஆ)

# பல்லி சறுக்கிப் பாலுக்கை விழுந்த மாதிரி எல்லே?

மைத்திரிக்குப் பலன் சொன்ன சாத்திரிக்கு இப்ப அட்டமத்திலை சனியாம். அதாலை பல பிரச்சினையளிலை மாட்டுப்பட்டு இருக்கிறாராம் எண்டு காலத்தாலை முதலிதான் சொன்னவன். பல பிரச்சினையளுக்குக் காரணமாயும் இருந்திருக்கினம் உந்தச் சாத்திரிமார். நடக்கிறதை நடக்காது எண்ணுவினம். நடக்காததை நடக்கும் எண்டு அடிச்சுச் சொல்லி தங்கடை லாபத்தை பாத்துக் கொண்டு போறவையும் அவைதான். உவையின்ரை புலுடா எல்லாத்திலையும் வாய்க்கும். கல்யாணத்திலை வாய்க்காது. அவை மாட்டுப் படுறது கலியாணப் பொருத்தம் பாக்கிறதிலைதான். நூறு வீதம் பொருத்தம் எண்டு பாத்துக் குடுக்கிறதை முந்தி எண்டால் சனங்கள் கண் மூடிக் கொண்டு வாங்கிக் கொண்டு போவிடுவினம். இப்ப சனத்துக்குச் சாத்திரிமாற்றை புலுடா விளங்கின படியாலை அவையளின்ரை நூறுவீதம் எண்டதை நம்பிறதில்லை. பொருத்தம் எண்டதைத் தீர்மானிக்க முன்னம் இரண்டு மூண்டு சாத்திரிமாரிட்டைக் காட்டுவினம். காட்டின பிறகு அவையள் என்ன சொல்லினம் எண்டு ஒத்துப்பாத்த பிறகுதான் எல்லாத்தையும் செய்வினம். குடும்பத்திலை நாலைஞ்சு பொம்பிளைப் பிள்ளையள் இருந்து அவைக்குக் கலியாணம் பேசிச் செருப்புத் தேஞ்ச தாய் தேப்பன், ஒரளவு் சாத்திரம் தெரிஞ்சவையாத்தான் இருப்பினம். பொருத்தம் பாக்கப்போய்ச் சாத்திரிமார் சொல்லுறதை வைச்சுப் படிச்சுச் சாத்திரத்தைக் கேள்வி ஞானத்தாலை படிச்சவையளாத் தான் இருப்பினம். அப்ப அவைக்குச் சாத்திரிமார் பொய்யைச் சொல்லேலாது. உண்மையைத் தான் சொல்லவேணும்.

இலங்கை அரசியலிலையும் சாத்திரம் என்ன மாதிரி விளையாடிச்சுது தெரியுமே? எண்டு முதலி கேக்கிறான். சாத்திரத்தை முழுக்க முழுக்க நம்பித் தானே எலக்சனை முந்தி நடத்திக் கவிண்டு கொட்டிண்டவர் மகிந்தா. கொஞ்ச நாளாப் பாக்க வேணும். கையிலை கொடித் தம்பத்துக்குச் சுத்திறமாதிரி நூலையும் கட்டிக் கொண்டு. சாமி வேஷம்போட்ட ஆரைக் கண்டாலும் நூலைக் கட்டி விடுங்கோ எண்டு கேப்பராம் அவர். அவற்றை சாத்திரத்தை நம்பிற வீக்னஸைப் பாவிச்சுக் கைநூல் கட்டியே பணக்காரரானா கொழும்பு ஐயர்மார் கனபேர். அதாலை பஜிரோ வாங்கி ஓடினவையும் இருக்கினம்.

மகிந்தாவைக் கிணத்துக்கை விழுத்தின தெண்டது பத்தாமல், மைத்திரி ஜனாதிபதியா வந்தாப் பிறகு அவருக்குச் சாத்திரம் சொல்லப்போய் இப்ப அந்தச் சாத்திரி மாட்டுப்பட்டுப் போயிருக்கிறார். சீஐடி விசாரணையும் முடிஞ்சுதாம். இப்ப வழக்குப் போடுறது எப்பிடி எண்டு தீர்மானிக்கினமாம். என்ன சொன்னாலும் பறவாயில்லை, ஜனாதிபதி மைத்திரி செத்துப்போவார் எண்டு சொன்னது பிழை எல்லே? இதை ஆரோ அவருக்குக் காசைக் குடுத்துச் சொல்லச் சொன்னவையெண்டும் கதைக்கினம். அது உண்மையோ? பொய்யோ எண்டு தெரியாது. ஒரு சமசியத்திலைதான் சொன்னவையாம்.

மகிந்தாவை வெல்லுவர் எண்டு சொன்னவர். நடக்கேல்லை. மைத்திரி செத்துப் போவர் எண்டு சொன்னவர். அது இப்ப அவருக்குக் கழுத்திலை கயிறாப் போச்சுது. இத்தனையையும் சொன்ன ஆளுக்கு, தான் உள்ளை போவரோ? இல்லாட்டி வெளியாலையோ இருப்பனோ? எண்டு பாக்கத் தெரியேல்லைப் பாருங்கோவன்.

என்ன நடந்தாலும் மகிந்தாக்குச் சாத்திரத்திலை வைச்ச நம்பிக்கையை விடேலாமல் கிடக்காம். இப்பவும் இந்தியாவிலை இருந்து சாத்திரிமாரைக் கொண்டு வாறதும் நூல் கட்டிறதுமாத்தான் இருக்கிறாராம். கையிலை ஒரு குருசு மாதிரி ஐம்பொன்னிலை ஒண்டைக் கொண்டு திரியிறார் பாக்கேல்லையோ? ஆரோ சொன்னவையாம் அதை வைச்சிருந்தால் நல்ல பலன் கிடைக்கும் எண்டு.

என்னைக் கேட்டால் வாழ்க்கையிலை ஒழுக்காம இருக்கிறவைக்குத்தான் சாத்திரமும் பலிதமாகும் எண்டு சொல்லுவன். ஒழுக்கமா இருக்காத ஒரு ஆளுக்கு என்னெண்டு சாத்திரம் சரிவரும். சும்மா காசும், நேரமும் வீணாப்போம். இல்லையோ?

- வில்லங்கம் விநாசி

# மகிந்த ஆட்சிக்கு வந்தால் த.தே. கூ. என்ன செய்யும்?

கொழும்பு, ஏப். 04

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தற்போது ரணிலுக்கு ஆதரவு வழங்குமாயின், மகிந்த ஆட்சிக்கு வரும்போது தமது ஆட்சியை முன்னெடுத்து மக்களுக்கு எவ்வாறு சேவை செய்யும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன கேள்வி எழுப்பி உள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

"தற்பொழுது மத்திய வங்கி ஆளுநர் கூறுவது ஒன்றாகவும், நிதியமைச்சர் கூறுவது வேறொன்றாகவும் காணப்படுகின்றது. இவ்வாறான சந்தர்ப்பத்தில் வெளியில் இருந்து பார்ப்பவர்கள் இலங்கையை சிம்பாபே, எத்தியோப்பியா, ஆப்பிரிக்கா போன்ற நாடுகளின் நிலைக்குச் சமனாகவே கருதுவார்கள்.

இதேவேளை, ஐக்கியத் தேசியக் கட்சிக்குள் வெவ்வேறு வழிகளில் கட்சியின் தலைவருக்கு எதிராக செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன." என அவர் மேலும் தெரிவித்தார். (அ)

## வீட்டுப் பணியாளர்களுக்கு ஊழியர் சேமலாப நிதியம்

கொழும்பு, ஏப்.04

வீட்டுப் பணியாளர்களுக்கும் எதிர்காலத்தில் ஊழியர் சேமலாப நிதியத்தை வழங்குவதற்குத் தேவையான சட்ட நகல் வரைவைத் தயாரித்து நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளதாக அமைச்சர் டபிள்யு.டி.ஜே.செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

"பெரும் எண்ணிக்கையிலான வீட்டுப்பணியாளர்களுக்கு இதுவரை காலம் இல்லாதிருந்த உரிமைகள் பலவற்றை பெற்றுக் கொடுக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதற்கு அமைச்சரவை அங்கீகாரமும் கிடைத்துள்ளது. அதற்கு இணங்க ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் ஆகியவற்றை செலுத்த வேண்டி வரும். உழைக்கும் மக்களுக்கு உரித்தான சகல தொழிலாளர் உரிமைகளையும் வீட்டுப் பணியாளர்களுக்கும் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்." என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஆ)

# தொடர்ச்சிகள்

### கரவெட்டி... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

7 உறுப்பினர்களையும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் 7 உறுப்பினர்களையும் தமிழர் விடுதலை கூட்டணி 3 உறுப்பினர்களையும் ஈ.பி.டி.பி 3 உறுப்பினர்களையும், ஐக்கிய தேசிய கட்சி 2 உறுப்பினர்களையும் கொண்டுள்ளது.

கரவெட்டி பிரதேச சபையின் தவிசாளரை தெரிவு செய்வதற்கான முதலாவது கூட்டம் நேற்று காலை வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பற்றிக் டிறஞ்சன் தலைமையில் இடம்பெற்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் தங்கவேலாயுதம் ஐங்கரன் தவிசாளர் பதவிக்குக்கு பிரேரிக்கப்பட்டார். சிறிலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் சதாசிவம் இராமநாதன் பிரேரிக்கப்பட்டார்.

இவ்விருவருக்கிடையில் பகிரங்கமாக வாக்கெடுப்பு இடம்பெற்றது. இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் பிரேரிக்கப்பட்ட த.ஐங்கரன், ஐ.தே.கவின் ஆதரவுடன் பதினொரு வாக்குகளை பெற்று தவிசாளராக தெரிவு செய்யப்பட்டார்

இவரை எதிர்த்து போட்டியிட்டசிறிலங்கா சுதந்திர கட்சியின் உறுப்பினர் ச.இராமநாதன் பத்து வாக்குகளை பெற்றார்.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் மற்றும் தமிழர் விடுதலை கூட்டணியினர் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.

அதைத்தொடர்ந்து இடம்பெற்ற உப தவிசாளர் தெரிவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் பிரேரிக்கப்பட்ட கந்தர் பொன்னையா போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

### கூட்டமைப்பின் முடிவு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியோர் ஜனாதிபதி மாளிகைக்கு சென்று, ஜனாதிபதியுடன் பேச்சு நடத்தியிருந்தனர். இதன்பின் மீண்டும் கூட்டமைப்பின் கலந்துரையாடல் ஆரம்பித்தது.

ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்க வேண்டும் என சம்பந்தன், மாவை சேனாதிராசா, சுமந்திரன், சிறிநேசன் ஆகியோர் அபிப்பிராயம் தெரிவித்த நிலையில் ஏனையவர்கள் இதற்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்துள்ளனர். செல்வம் அடைக்கலநாதன், சிறிதரன் உள்ளிட்டவர்கள் வாக்களிக்காமல் நடுநிலைமை வகிக்கலாமெனக் கூறினர்.

இந்த நிலையில் கூட்டமைப்பின் முடிவு இன்று காலை அறிவிக்கப்படவுள்ளது.

### கூட்டமைப்பின் ஆதரவை... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவைப் பெற்றால் அது எதிர்விளைவுகளை ஏற்படுத்தும்.

கூட்டமைப்பின் ஆதரவைப் பெறுவது, பொதுமக்களுக்கு தவறான தகவலை கொண்டு செல்லும் என்றும் அவர் கூறியுள்ளார்.

ஜனாதிபதியின் இந்தக் கருத்து தொடர்பாக ஐதேக நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளனர்.

ஜனாதிபதியின் இக்கருத்துக்கு மறுப்புத் தெரிவித்த அமைச்சர் மங்கள சமரவீர,

தாங்கள் இப்பதவிக்கு தெரிவு செய்யப்பட்டது தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவுடனேயே ஆகும் எனவும் ஜனாதிபதிக்கு நினைவுபடுத்தியுள்ளதாகவும் அரசியல் வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன.

### பருத்தித்துறை... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முதலாவது அமர்வில், தலைவர் தெரிவு இடம்பெற்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில், அ.சா. அரியகுமாரும், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் சார்பில், ஜெயபாலனும், தலைவர் பதவிக்குப் பிரேரிக்கப்பட்டு பகிரங்க வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இதில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அ.சா. அரியகுமார் 13 வாக்குகளை பெற்று தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். அவரை எதிர்த்துப் போட்டியிட்ட, ஜெயபாலனுக்கு 4 வாக்குகள் மாத்திரம் கிடைத்தன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 8 உறுப்பினர்களும், ஈ.பி.டி.பி.யின் 3 உறுப்பினர்கள், ஐ.தே.க. மற்றும் சிறிலங்கா பொதுஜன முன்னணியின் தலா 1 உறுப்பினரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் அரியகுமாருக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணி என்பன வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை.

இதையடுத்து, துணைத் தலைவராக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாலசிங்கம் தினேஸ் ஒருமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

### கூட்டமைப்புடன்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைக்கும் பணிகளில் போரதீவுப்பற்று பிரதேசசபை நேற்று செவ்வாய்க்கிழமை காலை முதல் அமர்வு கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் எம்.வை.எம்.சலீம் தலைமையில் ஆரம்பமானது.

இந்த அமர்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 08 உறுப்பினர்களும் ஐக்கிய தேசிய கட்சி 03 உறுப்பினர்களும் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் 02 உறுப்பினர்களும் தமிழ் தேசிய விடுதலை கூட்டமைப்பு 01 உறுப்பினரும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர் ஒருவரும், மற்றும் தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணி உறுப்பினர் ஒருவரும், சுயேச்சை குழு 02இன் இரு உறுப்பினர்களுமாக 18 உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

இதனடிப்படையில் தவிசாளரை தெரிவுசெய்யும் வகையில் திறந்த வாக்கெடுப்பு கோரியதற்கு இணங்க திறந்த வாக்கெடுப்பு நடாத்தப்பட்டது.

தவிசாளருக்கான வாக்கெடுப்பில் சுயேச்சை குழு 02இல் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினரான வி.ஆயுஷ்மன், தமிழ் தேசிய கூட்டமைப்பின் யோகநாதன் ரஜனி ஆகியோருக்கு இடையில் நிலவிய போட்டியின் அடிப்படையில் 09 உறுப்பினர்கள் ஆதரவாகவும் எதிராக எட்டு உறுப்பினர்களும் நடுநிலையாக ஒருவரும் வாக்களித்தனர்.

இதன்போது தமிழ் தேசிய விடுதலைக்கூட்டமைப்பு நடுநிலையாக வாக்களிப்பில் கலந்துகொண்டதுடன் தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணி தமிழ்தேசிய கூட்டமைப்புக்கு ஆதரவாக வாக்களித்தது.

இதன்படி தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாலையடி வட்டை வட்டாரத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்ற யோகநாதன் ரஜனி தவிசாளராகவும் பிரதி தவிசாளராக தமிழ் தேசிய கூட்டமைப்பின் தும்பங்கேணி வட்டாரத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்ற நாராயணபிள்ளை தர்மலிங்கம் தெரிவுசெய்யப்பட்டனர்.

### விரைவில்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனைத் தெரிவித்துள்ளார்.

கட்சியின் பொறுப்பு மற்றும் கலந்துரையாடலின் அடிப்படையில் புதிய குழுவொன்றை நியமித்து தேவையான மாற்றங்களை கொண்டுவர நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும், கட்சியில் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு எதிர்வரும் மாகாண சபைத் தேர்தல்களிலும் பிற தேர்தல்களிலும் மிகவும் பலம் வாய்ந்த ரீதியில் ஐக்கிய தேசிய கட்சியை மாற்றுவதற்கான நடவடிக்கை மேற்கொள்வதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சிசபைத்தேர்தலையடுத்து நியமிக்கப்பட்ட ருவான் விஜேவர்தன குழுவின் ஆலோசனைகளையும், இப்போது கிடைத்துள்ள வேறு ஆலோசனைகளையும் நீண்ட ரீதியில் ஆராய்ந்து நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு, கட்சியின் புதிய உறுப்பினர்களை ஏப்ரல் 30 ஆம் திகதிக்கு முன்னர் பணிக்குழுவின் மூலம் நியமிப்பதற்காக கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களின் ஆலோசனைகளை பெறுவதற்கான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படுவதாக பிரதமர் மேலும் தெரிவித்தார்.

அதன்படி எதிர்வரும் 7 ஆம் மற்றும் 8 ஆம் திகதிகளில் ஐக்கிய தேசிய கட்சியின் பணிக்குழு மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களை இரண்டு விஷேட கலந்துரையாடல்களுக்கு அழைப்புவிடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அந்த கலந்துரையாடலில் கட்சியின் மறுசீரமைப்பு பணிகள் தொடர்பில் இறுதி முடிவை எடுக்கவுள்ளதுடன் கட்சியின் மறுசீரமைப்பு நடவடிக்கையை செயற்படுத்துவதை மேற்பார்வை செய்ய ஒரு குழுவும் நியமிக்கப்பட உள்ளது.

இந்த குழுவை நியமிக்கும் முறையை கட்சித் தலைவர், பொதுச் செயலாளர் மற்றும் பொருளாளர் ஆகியோருடன் கலந்துரையாடிய பின்னர் பிரதமர் ஊடாக நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அறிவிக்க உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

### தப்புமா தலை?... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமர்ப்பிக்கப்பட்டது. இது இன்றையதினம் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

தற்போது நாடாளுமன்றில் ஐக்கிய தேசிய முன்னணி தலைமையில் 106 எம்.பிக்களும்,சிறிலங்கா சுதந்திரக்கட்சி (ஜனாதிபதி மைத்திரி) தலைமையில் 49 எம்.பிக்களும், மகிந்த தலைமையிலான சிறிலங்கா பொதுஜன முன்னணி தரப்பில் 46 எம்.பிக்களும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் 16 எம்.பிக்களும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் ஒருவரும் ,ஜே.வி.பி சார்பில் அறுவரும், ஈ.பி.டி.பி சார்பில் ஒருவரும் என மொத்தம் 225 பேர் உள்ளனர்.

இந்த நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஆதரவாக பொதுஜன முன்னணி,ஜே.வி.பி மற்றும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியை சேர்ந்தவர்களும் வாக்களிக்கவுள்ளனர். அத்துடன் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், றிசாத்தின் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் என்பன மதில்மேல் பூனையாக உள்ளன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வாக்குகள் முக்கியம் பெறுபவையாக உள்ளன.

தற்போது நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஆதரவாக பொதுஜன முன்னணி, சிறிலங்கா சுதந்திரக்கட்சி,ஜே.வி.பி மற்றும் ஐ.தே.க.வில் ரணிலை எதிர்க்கும் சிலரும் ஆதரவாக வாக்களிப்பர் என எதிர்பார்க்கப்படும் நிலையில் ரணில் வெற்றி பெறுவாரா? என்பது அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

### பதவி விலக... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதவியில் நீடிக்கப்போவதாக பதிலளித்திருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதேபோன்று இன்று நடைபெறவுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு வாக்களிப்பதற்கு வருகைதர மறுத்துவரும் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களது விபரங்களையும் பிரதமர் கோரியிருப்பதாக அறியமுடிகின்றது.

இதேவேளை ஐ.தே.க எந்தவொரு அழுத்தத்திற்கும் அடிபணியாது. பிரதமருக்கெதிராக கூட்டு எதிரணியால் கொண்டு வரப்பட்டுள்ள நம்பிக்கையில்லா பிரேரணை தோற்கடிக்கப்படும். பிரதமர் பாதுகாக்கப்படுவதுடன் அரசாங்கமும் பாதுகாக்கப்படும்

இவ்வாறு ஐ.தே.க.வின் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்தார்.

எவர் அரசாங்கத்தை விட்டுச் சென்றாலும் அரசாங்கம் 2020 வரை கொண்டுசெல்லப்படும். அத்துடன் சுதந்திரக் கட்சியின் கணிசமானளவு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரதமருக்கு ஆதரவு அளிக்கவுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

### கோத்தா - மைத்திரி... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோத்தபாய ராஜபக்சவையும் தனித்தனியாக தனது நாட்டிற்கு சீனா அழைத்துள்ளது.

அதன் பின்னர் இவர்கள் இருபகுதியினரும் சந்திப்பதற்கு சீனா ஏற்பாடுகளை செய்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் அத்துரலிய ரத்ன தேரர் அமைச்சர் எஸ்.பி. திசநாயக்க உட்பட ஐவர் கொண்ட குழுவிற்கு அழைப்பு விடுத்தபோதிலும் அவர்கள் இருவரும் சீனா செல்லவில்லை.

மார்ச் 28 ஆம் திகதி சீனாவிற்கு விஜயம் மேற்கொண்ட சிறிசேனவின் ஆலோசகர் சிரால் லக்திலக தலைமையிலான குழுவினர் அங்கு கோத்தபாய ராஜபக்சவுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளனர்.

இருதரப்பும் மேற்கொண்ட பேச்சுவார்த்தைகள் குறித்த விபரங்கள் வெளியாகாதபோதிலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் பொது எதிரணிக்கும் இடையில் இணக்கப்பாட்டினை ஏற்படுத்துவதற்கான பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றிருக்கலாம் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

சீனாவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆலோசகர்கள் நாடு திரும்பவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### நாடாளுமன்றை... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டுள்ளதாக சட்டம் ஒழுங்கு அமைச்சர் ரஞ்சித் மத்துமபண்டார தெரிவித்துள்ளார்.

பொலிஸார், பொலிஸ் விசேட அதிரடிப்படை மற்றும் கலகத் தடுப்புப் பொலிஸார் ஆகிய தரப்புக்கள் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட உள்ளன. நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுதந்திரமாக தங்களது வாக்குகளை அளிப்பதற்கு தேவையான பின்னணி உருவாக்கிக் கொடுக்கப்படும் .


அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களும் நாடாளுமன்றுக்கு தடையின்றி வருவதற்கு தேவையான ஏற்பாடுகளும் செய்து கொடுக்கப்படும். இதற்கு மேலதிகமாக நாடாளுமன்றுக்கு உள்ளேயும் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# மத்திய அரசைக் கண்டித்து அ.தி.மு.க. உண்ணாவிரதம்

## இ.பி.எஸ் - ஓ.பி.எஸ் பங்கேற்பு

சென்னை,ஏப்.04

காவிரி மேலாண்மை வாரியம் அமைக்காத மத்திய அரசைக் கண்டித்து அ.தி.மு.க. சார்பில் நேற்று தமிழகம் முழுவதும் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது. சென்னையில் நடைபெற்ற இந்தப் போராட்டத்தில் முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி மற்றும் துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் ஆகியோர் பங்கேற்றனர்.



காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பை நடைமுறைப்படுத்த உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டும் மத்திய அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மாறாக உச்ச நீதிமன்றத் தீர்ப்பில் உள்ள 'ஸ்கீம்' என்ற வார்த்தைக்கு விளக்கம் கேட்டு உச்ச நீதிமன்றத்தை நாடி உள்ளது. எனவே, தமிழக அரசு சார்பில் நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தொடரப்பட்டுள்ளது. இந்த வழக்கு வரும் 9 ஆம் திகதி விசாரணைக்கு வர உள்ளது.

இந்த நிலையில், காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க நடவடிக்கை எடுக்காத மத்திய அரசைக் கண்டித்தும், உடனடியாக காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க வலியுறுத்தியும் அ.தி.மு.க. சார்பில் தமிழகம் முழுவதும் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெறும் என்று கட்சித் தலைமை அறிவித்தது.

அதன்படி தமிழகம் முழுவதும் உண்ணாவிரதப் போராட்டம் தொடங்கியது. சென்னையில் நடைபெற்ற போராட்டத்தில் முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி , துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் மற்றும் அமைச்சர் ஜெயக்குமார், முன்னாள் அமைச்சர் கோகுல இந்திரா, கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் ஆகியோர் உண்ணாவிரதம் மேற்கொண்டனர். இதேபோல் அனைத்து மாவட்டங்களிலும் அந்தந்தப் பகுதி நிர்வாகிகள் தலைமையில் போராட்டங்கள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

# பருவநிலை மாற்றத்தால் உணவுப் பற்றாக்குறை!

பிரிட்டன், ஏப். 04

பருவநிலை மாற்றத்தால் உலகளாவிய ரீதியில் உணவுப் பற்றாக்குறை ஏற்படவுள்ளது என ஆய்வு முடிவுகள் தெரிவித்துள்ளன.

பிரிட்டனில் உள்ள எக்சாசடா பல்கலைக்கழகம் மேற்கொண்ட ஆய்வில் பருவ நிலை மாற்றத்தால் உலகளாவிய ரீதியில் உணவுக்கு பற்றாக்குறை ஏற்படவுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

122 நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் மூலமே இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.

இதனடிப்படையில் உலக வெப்பநிலை 2 டிகிரி செல்சியஸ் அதிகரிக்கும் பட்சத்தில், வளர்ந்து வரும் 76 வீத நாடுகளில் உணவுப் பற்றாக்குறை அதிகளவில் ஏற்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு மழை இன்மை, வறட்சி என்பனவே காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஆ)

# எகிப்தில் அப்துல் சிசி மீண்டும் ஜனாதிபதியானார்

கெய்ரோ, ஏப். 04

எகிப்து நாட்டில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் அப்துல் சிசி மீண்டும் ஜனாதிபதியாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

எகிப்து நாட்டின் ஜனாதிபதித் தேர்தல் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. இந்தத் தேர்தலில் ஜனாதிபதி அப்துல் சிசி மீண்டும் போட்டியிட்டார். அவரை எதிர்த்து மவுசா முஸ்தபா போட்டியிட்டார்.

இந்நிலையில், தேர்தலில் பதிவான வாக்குகள் நேற்று முன்தினம் எண்ணப்பட்டன. முடிவில் தற்போதைய ஜனாதிபதி அப்துல் சிசி சுமார் 97 சதவிகிதம் வாக்குகள் பெற்றுள்ளார். இதன்மூலம் அவர் மீண்டும் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இதனால் எதிர்வரும் 2022 ஆம் ஆண்டு வரை எகிப்து நாட்டின் ஜனாதிபதிப் பதவியில் அவர் நீடிப்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஆ)

# வெள்ளிக் கிரகத்தில் வேற்றுக் கிரகவாசிகள்!

வொஷிங்டன், ஏப்.04

வெள்ளிக் கிரகத்தின் அமில மேகங்களுக்கு நடுவே வேற்றுக்கிரக வாசிகள் வாழக் கூடும் என அமெரிக்க விண்வெளி மையமான நாசா அறிவித்துள்ளது.

கனத்த கரியமிலவாயு மேகங்களால் எப்போதும் மூடிக் கொண்டிருப்பதால் வெள்ளியின் கரும்பட்டைகளை கண்டறியும் ஆய்வின் போது, பூமியில் வாழும் பக்டீரியாக்களை போன்று ஒளியை உறிஞ்சும் தன்மை வெளிப்படுத்தப்பட்டது. இந்தப் பண்பு ஏரிகளிலும் குளங்களிலும் உள்ள பாசிகளை ஒத்திருந்தது என விஞ்ஞானிகள் ஆச்சரியப்பட்டனர்.

வெள்ளி கிரகம் பாதியளவு சல்பூரிக் அமிலத்தால் ஆனது. தன் மீது விழும் 75 சதவிகித சூரிய கதிர்களைப் பிரதிபலிக்கக் கூடியது. இதுவே எளிமையான நுண்ணுயிர்கள் வாழ ஆதாரமாக இருக்கிறது என விஞ்ஞானிகள் கருதுகின்றனர். இதேவேளை கடந்த வாரத்தில் விண்ணுயிரியல் பத்திரிகையில் வெளியிடப்பட்ட ஆய்வு முடிவுகள் வளிமண்டலத்துக்கு அப்பாற்பட்ட இவ்வகை நுண்ணுயிர்கள் குளிர்மேகக் காற்று வீசுவதன் மூலம் பரவி உயிர் வாழும் தன்மை கொண்டது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஆ)

# மண்டேலாவின் மனைவி வின்னி மரணம்!



ஜோகனஸ்பர்க், ஏப்.04

கறுப்பின மக்களின் உரிமைகளுக்காகப் போராடிய தென் ஆபிரிக்க முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவின் முன்னாள் மனைவி வின்னி மண்டேலா நேற்று முன்தினம் காலமானார்.

தென் ஆபிரிக்காவில் உள்ள குலு கிராமத்தில் பிறந்த நெல்சன் மண்டேலா, காங்கிரஸ் இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டிருந்தார். அப்போது அவருக்கும் முதல் மனைவிக்கும் இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக இருவரும் பிரிந்தனர். இந்த நிலையில், தென் ஆபிரிக்க அரசு, ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ் கட்சியைத் தடை செய்தது. மண்டேலா மீது வழக்குத் தொடரப்பட்டது. ஐந்தாண்டுகளாக அந்த வழக்கு விசாரணை நடந்து கொண்டிருந்தது. இதனை அடுத்து, 1958 ஆம் ஆண்டு நோம்ஸாமோ வின்னி பிரெட் மடிக்கிசேலா என்பவரை மண்டேலா இரண்டாவதாக மணந்தார்.

மண்டேலா 1962 ஆம் ஆண்டு சிறையில் அடைக்கப்பட்டார். ஏறத்தாழ 27 ஆண்டுகள் சிறையில் இருந்தார். வின்னியும் தனது கணவரின் கொள்கைகளுக்காகப் போராடி சிறைவாசம் அனுபவித்தார். 1990 ஆம் ஆண்டு மண்டேலா சிறையிலிருந்து விடுதலை பெற்றார். விடுதலை பெற்றபோது அவருக்கு வயது 71. அவர் 1994 ஆம் ஆண்டு தென் ஆபிரிக்காவின் ஜனாதிபதி ஆனார். இவரது ஆட்சிக் காலத்தின்போது நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த வின்னி மண்டேலா தென் ஆபிரிக்க நாட்டின் கலை மற்றும் கலாசாரத் துறை இணை அமைச்சராக நியமிக்கப்பட்டிருந்தார்.

இதற்கிடையே 37 ஆண்டுகால தாம்பத்திய வாழ்க்கையில் இரு குழந்தைகளுக்கு தாயாகிப் பொது வாழ்க்கையில் கணவருடன் சேர்ந்து பல்வேறு வேதனைகளை அனுபவித்த வின்னி மண்டேலா, கருத்து வேறுபாடு காரணமாக நெல்சன் மண்டேலாவிடம் இருந்து கடந்த 1996 ஆம் ஆண்டில் விவாகரத்துப் பெற்றார்.

அதன் பின்னர் வெறும் நாடாளுமன்ற உறுப்பினராக மட்டுமே அடுத்தடுத்து பதவி வகித்த வின்னி மண்டேலா, சமீபகாலமாக பொது நிகழ்ச்சிகளில் பங்கேற்காமல் இருந்து வந்தார். இந்த நிலையில், உடல்நலக்குறைவு காரணமாக காலமானார். (ஆ)

# 1,372 ரோபோக்கள் ஒரே இடத்தில் நடனம்

## புதிய கின்னஸ் சாதனை



இத்தாலி, ஏப்.04

இத்தாலியில் ஆயிரத்து 372 ரோபோக்கள் ஒரே இடத்தில் நடனமாடி புதிய கின்னஸ் சாதனை ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்தாலியில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் ஆயிரத்து 372 ஆல்பா 1 எஸ் ரக ரோபோக்கள் நடனமாடின. இது புதிய உலக சாதனையாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்கு முன் சீனாவில் 1069 ரோபோக்கள் நடனமாடியதே சாதனையாக இருந்தது. அந்தச் சாதனையை இத்தாலி முறியடித்துள்ளது. இது தொடர்பான வீடியோ இணையதளங்களில் வைரலாகப் பரவி வருகிறது.

40 சென்ரி மீற்றர் உயரம் உள்ள இந்த ரோபோக்கள் அலுமினியத்தால் செய்யப்பட்டு பிளாஸ்ரிக்கால் மூடப்பட்டுள்ளது. இந்த உலகச்சாதனை பார்வையாளர்களை வெகுவாக கவர்ந்ததுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

# ரஜினி-கமல் படங்களை கர்நாடகாவில் அனுமதியோம்

பெங்களூர், ஏப். 04

காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க வலியுறுத்தும் நடிகர் ரஜினிகாந்த், கமல் ஹாசன் ஆகியோரின் படங்களை கர்நாடகத்தில் திரையிட அனுமதிக்க மாட்டோம் என்று கன்னட சலுவாளி கட்சித் தலைவர் வாட்டாள் நாகராஜ் அறிவித்துள்ளார்.

“காவிரி மேலாண்மை வாரியத்தை அமைக்குமாறு தமிழ்நாட்டு அரசு வலியுறுத்தி வருகின்றமை கண்டிக்கத்தக்கது. எந்தக் காரணத்தைக் கொண்டும் மத்திய அரசு காவிரி மேலாண்மை வாரியத்தை அமைக்கக் கூடாது.

நாளை தமிழக எல்லைப் பகுதியான அத்திப்பள்ளியில் சாலை மறியல் போராட்டம் நடத்துவோம். தி.மு.க. செயல் தலைவர் மு.க.ஸ்டாலினை நாங்கள் கண்டிக்கிறோம்.” என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு காவிரி பிரச்சினை வெடித்தபோது கர்நாடகத்தில் தமிழர்கள் தாக்கப்பட்டனர். அப்போது அதுபற்றி கருத்து தெரிவித்த நடிகர் ரஜினிகாந்த் "தமிழர்களை தாக்கி கலவரம் செய்தவர்களை அடித்து உதைக்க வேண்டும்." என்று கூறினார். இதனால், அந்த நேரத்தில் ரஜினிகாந்த் நடித்த “குசேலன்” படம் கர்நாடக மாநிலத்தில் வெளியாவதில் சிக்கல் ஏற்பட்டது. அந்தப் படத்தை திரையிட அனுமதிக்க மாட்டோம் என்று கன்னட சலுவாளி கட்சித் தலைவர் வாட்டாள் நாகராஜ் உட்பட கன்னடத் தலைவர்கள் அறிவித்தனர்.

இதைத் தொடர்ந்து கர்நாடகம் சென்ற ரஜினிகாந்த் “தான் அப்படி பேசியது தவறு” என்றும், கர்நாடக மக்கள் வீரத்தை காட்ட வேண்டும் என்றும், அதற்கு தான் துணையாக இருப்பதாகவும் கூறி கன்னட மக்களிடம் மன்னிப்பு கேட்டார். இதைத் தொடர்ந்து அப்போது ‘குசேலன்’ படம் கர்நாடக மாநிலத்தில் திரையிட அனுமதிக்கப்பட்டது.

தற்போது அதே போன்ற சூழ்நிலை ஏற்பட்டு உள்ளது. காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க வேண்டும் என்று ரஜினிகாந்த் கருத்து தெரிவித்துள்ளார். இதனால் அவர் நடித்த ‘காலா’ மற்றும் ‘2.0’ படங்கள் கர்நாடகத்தில் வெளியாகுமா? என்ற கேள்விக்குறி எழுந்து உள்ளது. (ஆ)

# டெல்லி அணியுடன் இணைந்தார் ஷமி

புதுடெல்லி,ஏப். 04

மனைவியின் பிரச்சினையில் இருந்து விடுபட்டு ஐ.பி.எல். போட்டியில் விளையாடுவதற்காக பயிற்சியில் ஈடுபட்டு வருகிறார் முகமது ஷமி.

இந்திய கிரிக்கெட் திருவிழா என்று அழைக்கப்படும் ஐபிஎல் கிரிக்கெட் தொடரின் 11-வது சீசன் ஏப்ரல் மாதம் தொடங்கி மே மாதம் வரை நடக்கவுள்ளது. இந்த தொடரில் டெல்லி டேர் டெவில்ஸ் அணிக்காக விளையாடவுள்ளார் முகமது ஷமி.

அண்மையில் இவரது மனைவி ஹஸின் ஜஹான், தனது கணவர் கொடூரமானவர். அவர் பல பெண்களுடன் உறவு வைத்துள்ளார். ஷமி மற்றும் அவரது குடும்பத்தினர் இரண்டு வருடங்களுக்கு மேலாக தன்னை உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் துன்புறுத்தி வருகிறார்கள் என கொல்கத்தா காவல் துறைக்கு புகார் கொடுத்தார். இது தொடர்பாக பொலிஸார் விசாரித்து வருகின்றனர். மேலும், அவர் ஷமி சூதாட்டத்தில் ஈடுபட்டதாகவும் கூறியிருந்தார். இதனால் பிசிசிஐ அவரின் பெயரை ஒப்பந்த பட்டியலில் சேர்க்கவில்லை.

பின்னர் அவர் சூதாட்டத்தில் ஈடுபடவில்லை என்று விசாரணையில் தெரியவந்தது. இதனால் பிசிசிஐ இந்திய வீரர்களின் ஒப்பந்த பட்டியலில் அவரை பி கிரேடில் சேர்த்தது. இதற்கிடையே டேராடூனில் இருந்து டெல்லி சென்ற ஷமியின் கார் விபத்துக்குள்ளாகி அவருக்கு தலையில் காயம் ஏற்பட்டது. இதனால் அவர் ஐபிஎல் தொடரில் பங்கேற்பாரா? என்ற சந்தேகம் ஏற்பட்டது.

இந்நிலையில், ஐபிஎல் தொடரில் டெல்லி டேர் டெவில்ஸ் அணிக்கு விளையாடுவதற்காக அவர் பயிற்சியில் ஈடுபட்டு வருகிறார்.






# சாதனையாக மாறிய 48 வருட சோதனை

ஜோகன்னஸ்பர்க், ஏப். 04

ஜோகன்னஸ்பர்க் டெஸ்டின் 2ஆவது இனிங்ஸில் அவுஸ்ரேலியாவை 119 ஓட்டங்களில் சுருட்டி, 48 வருடம் கழித்து சொந்த மண்ணில் தொடரை கைப்பற்றியுள்ளது தென்னாபிரிக்கா.

தென்னாபிரிக்கா - அவுஸ்ரேலியா இடையிலான நான்காவது மற்றும் கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி ஜோகன்னஸ்பேர்க்கில் நடைபெற்று வந்தது. இதில் நாணயச் சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்க அணி துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது. அதன்படி முதலில் களம் இறங்கிய தென்னாபிரிக்க அணி மார்கிராமின் (152) அபார சதத்தால் 488 ஓட்டங்கள் குவித்து அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. அவுஸ்ரேலியா அணி சார்பில் கம்மின்ஸ் 5 விக்கெட்டுக்கள் கைப்பற்றினார்.

பின்னர் அவுஸ்ரேலியா முதல் இனிங்ஸை தொடங்கியது. கவாஜா (53), டிம் பெய்ன் (62), பேட் கம்மின்ஸ் (50) ஆகியோரின் அரைச்சதங்களால் 221 ஓட்டங்கள் எடுத்த நிலையில் அனைத்து விக்கெட்டுக்களையும்இழந்து பலோ ஒன் ஆனது.

267 ஓட்டங்கள் முன்னிலை பெற்ற போதிலும் பலோ-ஒன் கொடுக்காமல் தென்னர்பிரிக்கா 2-வது இனிங்ஸை தொடங்கியது. டு பிளிசிஸ் (120), டீன் எல்கர் (81) ஆகியோரின் சிறப்பான ஆட்டத்தால் தென்னாபிரிக்கா 6 விக்கெட் இழப்பிற்கு 344 ஓட்டங்கள் எடுத்து ஆட்டத்தை இடைநிறுத்தியது. இதனால் ஒட்டுமொத்தமாக 611 ஓட்டங்கள் முன்னிலை பெற்றது.

612 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இமாலய இலக்குடன் அவுஸ்ரேலியா தனது இரண்டாவது இனிங்ஸை தொடங்கியது. மோர்னே மோர்கல் 2 விக்கெட்டுக்கள் வீழ்த்த அவுஸ்ரேலியா நேற்று 4-வது நாள் ஆட்ட முடிவில் 3 விக்கெட் இழப்பிற்கு 88 ஓட்டங்கள் எடுத்திருந்தது. ஹேண்ட்ஸ்காம்ப் 23 , ஷோன்மார்ஷ் 7 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தனர்.

இன்று ஐந்தாவது மற்றும் கடைசி நாள் ஆட்டம் தொடங்கியது. முதல் ஓவரை பிலாண்டர் வீசினார். இந்த ஓவரின் முதல் பந்தில் ஷோன் மார்ஷ் ஆட்டமிழந்தார். 4-வது பந்தில் மிட்செல் மார்ஷ் ஓட்டங்கள் ஏதும் எடுக்காமல் ஆட்டமிழந்தார். ஒரே ஓவரில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்ததால், அதில் இருந்து மீளமுடியவில்லை. அடுத்து வந்த கம்மின்ஸ் (1), சேயர்ஸ் (0), டிம் பெய்ன் (7) ஆகியோரை அடுத்தடுத்து வெளியேற்றினார். நாதன் லயன் ரன்அவுட் ஆக அவுஸ்ரேலியா 119 ஓட்டங்களில் சுருண்டது. பிலாண்டர் நேற்றைய ஆட்டத்தில் 7 விக்கெட்டுகளில் 6 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

தென்னாபிரிக்கா 492 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இந்த் வெற்றியின் மூலம் நான்கு போட்டிகளைக் கொண்ட தொடரை தென்னாபிரிக்கா 3-1 எனக் கைப்பற்றியது. 1970-க்குப் பிறகு தெண்ணரபிரிக்கா சொந்த மண்ணில் அவுஸ்ரேலியாவிற்கு எதிராக டெஸ்ட் தொடரை கைப்பற்றியது கிடையாது. இந்த தொடரை வென்று 48 வருட சோகத்திற்கு முடிவு கட்டியுள்ளது.

# சோதியின் தடுப்பாட்டத்தால் தொடரை வென்றது நியூஸிலாந்து

கிறிஸ்ட்சேர்ச், ஏப். 04

இங்கிலாந்து அணிக்கு எதிரான 2-வது டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து வீரர் சோதியின் சிறப்பான தடுப்பாட்டத்தால் போட்டி சமநிலையில் முடிய நியூசிலாந்து தொடரைக் கைப்பற்றியது.

நியூசிலாந்து- இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்டில் நியூசிலாந்து வெற்றி பெற்றிருந்தது. 2-வது மற்றும் கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி கிறிஸ்ட்சேர்ச் நகரில் நடைபெற்றது.

முதல் இனிங்ஸில் இங்கிலாந்து 307 ஓட்டங்களும், நியூசிலாந்து 278 ஓட்டங்களும் சேர்த்தன. 29 ஓட்டங்கள் முன்னிலையில் ஆடிய இங்கிலாந்து 2-வது இனிங்ஸில் 9 விக்கெட் இழப்புக்கு 352 ஓட்டங்கள் குவித்து ஆட்டத்தை இடைநிறுத்தியது. இதனால் நியூசிலாந்து வெற்றிக்கு 382 ஓட்டங்கள் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

இந்த இலக்குடன் ஆடிய நியூசிலாந்து நேற்றுமுன்தினம் 4-வது நாள் ஆட்டத்தின் முடிவில் விக்கெட் இழப்பின்றி 42 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

நேற்று 5-வது மற்றும் கடைசி நாள் ஆட்டம் நடந்தது. வெற்றிக்கு மேலும் 340 ஓட்டங்கள் தேவை, கைவசம் 10 விக்கெட் என்ற நிலையில் நியூசிலாந்து தொடர்ந்து விளையாடியது.

ஆனால், இங்கிலாந்து வீரர்களின் அபாரமான பந்துவீச்சால் நியூசிலாந்து விக்கெட்டுகளை இழந்து திணறியது. 219 ஓட்டங்களில் 7 விக்கெட்டை இழந்தது. தொடக்க வீரர் லாதம் 83 , கிராண்ட்ஹோம் 45 ஓட்டங்கள் எடுத்தனர்.

முன்னணி வீரர்கள் வெளியேறிய நிலையில் சோதி மட்டும் நிலைத்து நின்று ஆடினார். அவரது விக்கெட்டை மட்டும் எப்படியாவது எடுத்து விட வேண்டும் என்று இங்கிலாந்து பந்துவீச்சாளர்கள் கடுமையாகப் போராடினர். ஆனால் அவர்களது முயற்சி பலன் அளிக்கவில்லை. 5-ம் நாள் ஆட்ட நேர முடிவில் நியூசிலாந்து அணி, 8 விக்கெட் இழப்பிற்கு 256 ஓட்டங்கள் சேர்த்தது. இதனால் போட்டி சமநிலையில் முடிந்தது. சோதி 168 பந்துகளை சந்தித்து 56 ஓட்டங்கள் எடுத்து கடைசி வரை ஆட்டமிழக்காமல் இருந்தார். இங்கிலாந்து அணி தரப்பில் பிரோட், மார்க்வுட், ஜேக் லிச் தலா 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

முதல் போட்டியில் நியூசிலாந்து வெற்றி பெற்றதால், தொடரை 1-0 என கைப்பற்றியது. கடைசி போட்டியின் ஆட்டநாயகனாக டிம் சவுத்தியும், தொடர் நாயகனான டிரெண்ட் போல்ட்டும் தெரிவாகினர்.

# மேற்கிந்தியாவுடனான ரி 20 தொடர் பாகிஸ்தான் வசம்

கராச்சி, ஏப். 04

மேற்கிந்திய அணிக்கு எதிரான இரண்டாவது ரி 20 போட்டியில் பாகிஸ்தான் அணி 82 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரை கைப்பற்றியது.

பாகிஸ்தான் சென்றுள்ள மேற்கிந்திய அணி மூன்று போட்டிகள் கொண்ட ரி 20 தொடரில் விளையாடி வருகிறது. முதல் ரி 20 போட்டியில் பாகிஸ்தான் அணி வென்றது.

இந்நிலையில், இரண்டாவது ரி 20 போட்டி நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் நாணயச் சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணி துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

இதன்படி பாகிஸ்தான் அணியின் ஜமான் 6 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அதன்பின் அசாம் உடன், ஹூசைன் தலாட் ஜோடி சேர்ந்தார். இருவரும் நிதானமாக விளையாடி ஓட்டங்கள் சேர்த்தனர். இருவரும் அரைசதம் கடந்தனர். தலாட் 63 ஓட்டங்களுடனும் பின்னர் வந்த ஆசிப் அலி 14 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தார்.

இறுதியில் பாகிஸ்தான் அணி 20 ஓவர்கள் முடிவில் 3 விக்கெட் இழப்புக்கு 205 ஓட்டங்கள் குவித்தது. பாபர் அசாம் 97 , மாலிக் 17 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.



இதையடுத்து 206 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் மேற்கிந்திய அணி களமிறங்கிய மேற்கிந்திய அணி 19.2 ஓவர்களில் 123 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. இதன்மூலம் பாகிஸ்தான் அணி 82 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதன்மூலம் 2:0 என்ற கணக்கில் தொடரையும் தன்வசப்படுத்தியது. ஒரு போட்டி மீதமுள்ளது.

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 04.04.2018 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.